(2) தொழிற்சாலைக்குத் தேவையான அளவு தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி கிடைக்கப் பெறவேண்டும்.

(3) தொழிற்சாலைக்கு, கிரானைட் பிளாக்குகளை எடுத்துவரவும், தயாரிக்கும் கற்களை வெளியே அனுப்பவும் ரயில் நிலையம், நெடுஞ்சாலை ஆகிய போக்குவரத்து வசதி இருக்கவேண்டும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலம், சென்னை மணலி மற்றும் தர்மபுரி மாவட்டம் பர்கூர் அருகில் உள்ள மாதேபள்ளி ஆகிய இரண்டு இடங்களில், இத்தகைய வசதிகள் இருப்பதால், அங்கே தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே, உறுப்பினர் குறிப்பிடுகிற நார்த்தமலைப் பகுதியில் அப்படிப்பட்ட கனிமக் கற்கள் கிடைக்காத காரணத்தாலே, அத்தகைய தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 115, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

115—

உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு

*** 20476**—*திரு. கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர்களுக்கென வேலை வாய்ப்பில் ஒதுக்கப்பட்டுள்ள 3% இட ஒதுக்கீடு அரசுத் துறைகளில் கடைபிடிக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு துறைகள்/அரசு நிறுவனங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் போது ஊனமுற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், அப்பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு அறிக்கை அனுப்பப்படுகிறது. அவ்வறிக்கையின்

அடிப்படையில் ஊனமுற்றவர்கள், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் முன்னுரிமை அடிப்படையிலும் மற்றும் 3%இட ஒதுக்கீடு அடிப்படையிலும் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் தேர்வுகளில் தெரிவு செய்யப்படுபவர்கள் 3% இட ஒதுக்கீட்டின் மூலமும் நியமனம் செய்யப்படுகின்றனர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுள்ளவர்களுக்காகப் பல நல்ல திட்டங்களை அறிவித்து இன்றைக்கு அவர்களின் தெய்வமாக விளங்குகிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், 3 விழுக்காடு போதுமானதாக இல்லாமல் இருப்பதை நாம் அறிகிறோம். ஏனென்றால், உடல் ஊனமுள்ளவர்கள் தனியாகத் தொழில் செய்வது என்பது மிகவும் சிரமமானதாகும். ஆகவே அந்த 3 விழுக்காடு என்பதை 5 விழுக்காடாக உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உள்ளதா? அதே நேரத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பில் வயது வரம்பை உயர்த்திக் கொடுக்கிற திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் 5 சதவீதமாக அவர்களுக்கு உயர்த்துகின்ற எண்ணம் உள்ளதா எனக் கேட்கிறார்கள். 1981-ம் ஆண்டு 3.9 சதவீதம் மட்டும் உடல் ஊனம் உற்றவர்களுக்கு இடம் ஒதுக்கீடு கிடைத்தது. 1982-ம் ஆண்டு 3.1 சதவீதம் கிடைத்தது. 1987-ல் 2.4 சதவீதம் கிடைத்தது. 1988-ல் 2.2 சதவீதம் கிடைத்தது. 1989-ல் 2.5 சதவீதம் கிடைத்தது. ஆனால் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அவர்களுக்குத் தனிக்கவனம் செலுத்தப்பட்ட காரணத்தினாலே, 1991-ம் ஆண்டு 3.6 சதவீதமும், 1992-ஆம் ஆண்டு 4 சதவீதமும், 1993-ஆம் ஆண்டு 5 சதவீதமும், 1994-ம் ஆண்டு 5.6 சதவீதமும் அவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டு பணியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வயது வரம்பைத் தளர்த்துகிற எண்ணம், இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அவர்களுடைய ஊனத்தைப் பொறுத்து அது பரிசீலிக்கப்படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நிறுவனங்களில் அவ்வாறு கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சில நிறுவனங்களில் அவ்வாறு குறிப்பாகச் சட்டம் இல்லாத காரணத்தால் தவிர்க்கப்படுகிறார்கள். ஆகவே, அதை இவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று வரையறுக்கவேண்டும். அதே நேரத்தில், அரசு பொதுத்துறை நிறுவனங்களிலும், பெரிய பெரிய தனியார் ஆலைகளிலும்

இத்திட்டத்தைக் கொண்டுவந்தால், இன்னும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அது கட்டாயமாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் நாம் கட்டாயப்படுத்த முடியாது. இருந்தாலும் கூட, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனியார் நிறுவனங்களிலும் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக அளிக்கப்படவேண்டும் என்பதில், ஊக்குவிக்கப்படவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு நிரம்பப் பரிசுகளை அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பரிசுகளின் வாயிலாக - புரட்சித் தலைவி அவர்களின் பெயராலே அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தப் பரிசுகளைப் பெறுவதற்காக இன்றைக்கு பல்வேறு தனியார் நிறுவனங்கள் போட்டி போட்டு, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இதற்குத் தனியார் நிறுவனங்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்படுகின்றன.

முற்பகல் 11.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 116, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 117, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

117—

கோவையில் பொருட்காட்சி அமைக்கும் திட்டம்

*** 40692**—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையில் அரசு சார்பில் நிரந்தர பொருட்காட்சி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் தென்னிந்தியாவிலேயே தொழில் துறையில்